SriLankan Airlines

oneworld

**துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, இலங்கை

**கொள்வனவு இலக்கம் : ENG/ALC/RFP/22/030-1 & ENG/ALC/RFP/22/030-2**

**ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்தினால் ஐந்து (5) குறுகிய பருமன் மற்றும் ஐந்து (5) அகலமான பருமனைக் கொண்ட விமானங்களை இயக்கும் குத்தகை முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (எஸ்எல்ஏ)**

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையியல் கொள்முதல் குழுவின் தலைவரால், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் சார்பாக, 2022 டிசெம்பர் 19 ஆம் திகதி முதல் அந்தந்த 'முன்மொழிவுக்கான கோரிக்கை (ஆர்.எ.ஃப்.பி)' இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, தகுதியான மற்றும் தகுதிவாய்ந்த ஏலதாரர்களிடமிருந்து பொருத்தமான விமானங்களை இயக்குவதற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக ஏலங்கள் கோரப்படுகின்றன. 'முன்மொழிவுக்கான கோரிக்கை (ஆர்.எ.ஃப்.பி)' தொடர்பான விடயங்கள் இலங்கை விமான நிறுவனத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் (**https://www.srilankan.com/en_uk/corporate/tender-notices**) காணப்படுகின்றன.

சர்வதேச போட்டி ஏல (ஐசிபி) கொள்வனவு முறையினூடாக இலங்கை அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டல்களுக்கமைய ஏலச் செயற்பாடு நடாத்தப்படும். சாத்தியமான விமானத்தை குத்தகைக்கு விடுவதற்காக சட்டபூர்வ உரிமைகளைக் கொண்ட அனைத்து ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த ஏலதாரர்களும், ஆர்.எ.ஃப்.பி. குறியீடான (ENG/ALC/RFP/22/030-1 அல்லது ENG/ALC/RFP/22/030-2) என்பதைக் குறிப்பிட்டு 2023 ஜனவரி 30 ஆம் திகதி இலங்கை நேரம் (GMT + 0530) 1400 மணிக்கு முன்பதாக **asset@srilankan.com** எனும் பாதுகாப்பான மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்வதன்மூலம் தங்கள் ஏலங்களைச் சமர்ப்பிக்கலாம்.

ஏலங்கள் தகுதியுள்ளதாகக் கருதப்படுவதற்கு அவை பின்வரும் தேவையான ஆவணங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

- ஏலதாரரின் சுயவிபரம்
- ஏலதாரருக்கு விமானத்தை குத்தகைக்கு விடுவதற்கான ஏலத்தை சமர்ப்பிக்க விமானத்தின் உரிமையாளரிடமிருந்து அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் ஏலதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் எஸ்.எல்.ஏ உடன் குத்தகை ஒப்பந்தத்தில் கையெழுத்திட உரிமையாளர் ஒப்புக்கொள்கிறார் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- விமானத்தின் தற்போதைய நிதி ஏற்பாடுகள் / அடமானம் / உரிமங்கள் தொடர்பான தகவல்கள் (விமானம் அடமானத்தின் கீழ் உள்ளதா போன்றவை)

ஆர்.எ.ஃப்.பி. யுடன் இணைக்கப்பட்டுள்ள ஏல ஒப்புகைப் படிவம் பூர்த்தி செய்யப்பட்டு, முறையாக கையொப்பமிடப்பட்டு **praneeth.alwis@srilankan.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு பிரதியிடப்பட்டு **umega.seneviratne@srilankan.com** எனும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். ஆர்.எ.ஃப்.பி. பற்றிய ஏதேனும் விசாரணைகள் அல்லது தெளிவுபடுத்தல்களை 2023 ஜனவரி 16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் **praneeth.alwis@srilankan.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு பிரதியிடுவதுடன் **umega.seneviratne@srilankan.com** எனும் முகவரியைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

உரிய ஆர்.எ.ஃப்.பி. உடன் பின்னிணைப்பு மூலம் குறிப்பிடப்படாவிட்டால், ஏலங்கள் 2023 ஜனவரி 30 திகதி அன்று இலங்கை நேரப்படி (GMT + 0530) பிற்பகல் 2.15 மணிக்கு இலங்கை விமான நிலையத்தினால் இலத்திரனியல் முறையில் திறக்கப்படும். தாமதமான ஏலங்கள் நிராகரிக்கப்படும். ஏல திறப்பு விழாவில் பங்கேற்க விரும்பும் தரப்பினர் ஏல திறப்பு திகதிக்கு ஏழு (7) நாட்களுக்கு முன்னர் **praneeth.alwis@srilankan.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு பிரதியிடுவதுடன் **umega.seneviratne@srilankan.com** மின்னஞ்சல் செய்வதன் மூலம் தெரிவிக்க வேண்டும்.

ஆர்.எ.ஃப்.பி. தொடர்பாக ஏதேனும் திருத்தங்கள் / அறிவித்தல்கள் எஸ்எல்ஏ இன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் காணப்படுகின்றன.

**தலைவர்**
**அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு**
**துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**
**இலக்கம் 19, சைத்திய வீதி, கொழும்பு 01, இலங்கை.**